# முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்

## O.S.No.118/2021

## சாட்சியின் சான்றுரை PW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | ரகுநாதன் | வட்டம் | - | |
| த/பெ | - | பிரபாகரன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

08.08.2024 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.

வாதி சாட்சி 1 மீணடும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

என் தகவலின் பேரில் தான் பிராது போடப்பட்டது என்றால் சரிதான். நான் எனது பிராதில் பிரதிவாதி பிராமிசரி நோட்டின் அடிப்படையில் பணம் கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளது சரிதான். நான் பிராமிசாரி நோட்டின் அடிப்படையில் பணம் கொடுத்தேனா என்றால் பத்திரத்தின் அடிப்படையில் பணம் கொடுத்தேன். அப்படி என்றால் பிராமிசரி நோட்டு என்று எழுதியது தவறா என்றால் என் வழக்கறிஞரை தான் அதை பற்றி கேட்கவேண்டும். நான் வருமான வரி கட்டுகிறேனா என்றால் நான் கம்பெனி வைத்துள்ளேன் அதனால் கட்டுகிறேன். எனது தனிப்பட்ட பெயரில் கட்டுகிறேனா என்றால் இல்லை. கடன் ஒப்பந்தத்தில் யார் யார் சாட்சி என்றால் பசீர், செங்கூட்டுவன் சாட்சியாக போட்டுள்ளார்கள். அதில் அவர் தகப்பனார் பெயர், ஊர் பெயர் போட்டுள்ளார்களா என்றால் தகப்பனார் பெயர் போடவில்லை ஊர் பெயரும் போடவில்லை. பிரதிவாதியின் நான் படித்து பார்த்தேனா என்றால் என் வழக்கறிஞர் படித்தார். என் பிரமாண வாக்குமூலத்தில் ஆட்சேபனை பற்றி தெரிவித்துள்ளேனா என்றால் ஆம். பிரதிவாதி ஆட்சேபனையில் சாட்சிகளின் பெயர் தகப்பனார் பெயர், ஊர் இல்லை

என்றும் அதனால் அதை தெரிவிக்கும் பட்சத்தில் அவர்களுக்கும் தமக்கும் என்ன விரோதம் என்று சொல்ல இயலும் என்று சொல்லியிருந்தார் என்றால் சரிதான். அதற்காக நாங்கள் அவரது அடையாள அட்டையை கொடுத்துள்ளோம். சாட்சியாக விசாரிக்கும் போது தான் அடையாள அட்டையை கொடுத்தோம் ன்றால் அதற்கு முன்பே கொடுத்துவிட்டோம். அது எப்போது கொடுத்தோம் என்றால் வழக்கு ஆரம்பத்திலே கொடுத்தோம். வழக்கு விசாரணை தொடங்குவதற்கு முன்பாக சாட்சி பட்டியலை நீதிமன்றத்தில் அளிக்கவில்லை என்றால் என் வழக்கறிஞர் கொடுத்துள்ளார். வாசாஆ.1ஐ யார் கணிணியாக்கம் செய்தார் ன்றால் விஜயலட்சுமி தான் செய்தார். அவர் எங்கு கணிணியாக்கம் செய்தார் என்றால் திருவிகா நகரில் உள்ள சம்பத் என்ற ஆவண எழுத்தரிடம் தட்டச்சு செய்ததாக எனக்கு சொன்னார். அதில் அவரது கையெழுத்து உள்ளதா என்றால் அதை பிரதிவாதி தான் சொல்லவேண்டும். அந்த ஆவணத்தை கணிணியாக்கம் செய்ததை நான்நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் எங்கு வைத்து கையெழுத்து போட்டார்கள் என்றால் திருவிகா வீதியில் உள்ள சம்பத் ஆவண எழுத்தர் பக்கத்தில் உள்ள பைனான்சியர் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து போட்டார்கள். அதற்கு பெயர் கிடையாது. அவர் யார் என்றால் என் நண்பர். அவருக்கு என்ன வயது இருக்கும் என்றால் வயது 45 இருக்கும். அவர் எத்தனை வருடமாக பைனான்ஸ் நடத்துகிறார் என்றால் தெரியாது. சாட்சிகள் எங்கு கையெழுத்து போட்டார்கள் என்றால் சம்பத் தட்டச்சர் அலவலகத்திற்கு வெளியில் வைத்து போட்டார்கள். சாட்சிகளை எப்போது அழைத்து வந்தேன் என்றால் 11 மணிக்கு அழைத்து வந்தேன். அவர்கள் எங்கு வந்தார்கள் என்றால் என் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களிடம் பணம் கொடுக்கிறேன் என்று அழைத்து வந்தேன். 2சாட்சிகளும் என் வீட்டிற்கு வந்தார்கள். அவர்கள் யார் என்றால் என் நண்பர்கள் அடிக்கடி என்னை பார்க்கவருவார்கள். வாசாஆ1 ஆவணம் எழுதப்போவது அவர்களுக்கு தெரியுமா

என்றால் தெரியும். பிரதிவாதி எங்கு வந்தார் என்றால் கணிணி மையத்திற்கு வந்துவிட்டார். ஆவணத்தில் உள்ள கையெழுத்து பிரதிவாதி கையெழுத்து இல்லை என்றால் அவர் கையெழுத்து தான். சிவகாமி என்பவர் யார் என்றால் என் மாமியார். விஜயலட்சமி தந்தை பெயர் தெரியுமா என்றால் தெரியும் அவர் பெயர் மணி ஆகும். எனக்கும் மணிக்கும் எந்தவிதமான கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் பணம் கொடுக்கும் சமயத்தில் இல்லை. பிரதிவாதியின் இளையசகோதரர் சங்கரநாராயணனுக்கும் எனக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் அவ்வபோது கொடுப்பேன். சங்கரநாராயணனுக்கு பணம் கொடுக்கும் போது என மாமியார் பெயரில் ஒரு விக்கிரய உடன்படிக்கை எழுதி நான் வாங்கினேன் என்றால் அதை நான் வாங்கவில்லை அவர்கள் வாங்கிகொண்டார்கள். நான் சங்கரநாராயணனுக்கு கடன் கொடுக்கும் போது கடனுக்கு ஜாமினாக அவருக்குரிய சொத்தை கிரைய ஒப்பந்தமாக சிவகாமி பெயரில் வாங்கிகொண்டேன் என்றால் சரியல்ல. 20.02.2020ல் சங்கரநாராயணனுக்கு கடன் கொடுக்கும் போது நான் என் மாமியார் பெயரில் ஒரு கிரைய ஒப்பந்தம் வாங்கிகொண்டேன் என்றால் நான் அவருக்கு பணம் கொடுக்கவில்லை. அந்த பதிவு ஒப்பந்தத்தில் பிரதிவாதி சாட்சியாக கையெழுத்து போட்டார் என்றால் அதை என் மாமியாரிடம் தான் கேட்கவேண்டும். அதிலிருந்த சாட்சி கையெழுத்தை பார்த்து தான் வா.சாஆ.1ல் போலியாக கையெழுத்திட்டு ஆவணத்தை ஜோடித்துவிட்டேன் என்றால் சரியல்ல. விஜயலட்சுமி ஏற்கனவே என்னிடம் ரூ.50,000, ரூ.1லட்சம் வாங்கியுள்ளார் பெரிய பணத்திற்கு மட்டும் தான் நான் பத்திரத்தில் கையெழுத்து வாங்கியுள்ளேன். இதை நான் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி எனக்கு 2007லிருந்தே பழக்கம். பிரதிவாதி என்னிடம் எந்த காலத்திலும் பணம் வாங்கியது கிடையாது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் பிரதிவாதியின் தந்தை வட்டி கொடுத்ததாக வரவு வைத்து கொடுத்த சீட்டுக்கள் என்றால் அதில் உள்ள

கையெழுத்து என்னுடையது அல்ல. என் மாமியார் பெயரில் 20.02.2020 மற்றும் 01.07.2020ல் பிரதிவாதியின் தந்தை மற்றும் சகோதரரிடமிருந்து கிரைய ஒப்பந்தம் வாங்கி எழுதிகொண்டேன் என்றும் தற்போது அதை மறுத்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவருக்கு அவசர தேவைக்காக கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தார்கள் என்றால் தெரியாது. என் மனைவி பெயர் நித்யா ஆகும். அவர் பிரதிவாதியின் தந்தையிடமும் சகோதரரிடமும் கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. தந்தையிடம் வாங்கியத இல்லை. சகோதரரிடம் வாங்கியுள்ளார் அதன் பெயரில் வழக்கு நடக்கிறது. நித்யா வாங்கிய கிரைய ஆவணத்தில் பிரதிவாதி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். என் மாமியாரின் பெயரில் எழுதி கொடுத்த ஒப்பந்தத்தை ரத்து செய்தாகிவிட்டது என்றால் அதை அவரிடம்தான் கேட்கவேண்டும். மாமியாரின் பெயரிலும் என் மனைவியின் பெயரிலும் உள்ள ஆவணத்தில் பிரதிவாதி கையெழுத்து போட்டுள்ளார் என்றும் அது எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரியல்ல. நான் பதிவு அலுவலகத்திற்கு செல்லவில்லை. அதேபோல் நான் பிரதிவாதியிடமும் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை கேட்டேன் என்றும் அவர் மறுத்துவிட்டார் என்றும் அதனால் தான் வாசாஆ1 ஆவணத்தை தயார் செய்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் மாமியாருடன் நான் சுமூகமாக தான் உள்ளேன். வாசாஆ2 சம்மந்தமாக புகார் கொடுக்க என்னை அழைத்து சென்றார்கள் அதில் கொடுத்த ரசீது தான் அது. அதன் புகார் மனுவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்கும் எனக்கும் சம்மந்தமில்லை அதனால் தாக்கல் செய்யவில்லை. எதற்காக வாச.2ஐ தாக்கல் செய்தேன் என்றால் என் வழக்கறிஞரை தான் கேட்கவேண்டும். வாசாஆ4 சி.எஸ.ஆரின் புகார் மனுவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வாசாஆ3ன் புகார் மனுவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாச.ஆ2 முதல் 4 வரை வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்டவை என்றால் சரிதான். அந்த புகார் என்னவானது என்றால்

நிலுவையில் உள்ளது. பிரதிவாதி வாசாஆ1ஐ எழுதி கொடுக்கவில்லை என்றும் அதில் உள்ள கையெழுத்து அவருடையது இல்லை என்றும் அதில் சாட்சிகள் யாரும் கையெழுத்து போடவிலல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தகப்பனாரும் சகோதரர்கள் மிகவும் நல்லவர்கள் என்றும் அவர்களை தவறாக சித்தரித்துள்ளேன் என்றால் சரியல்ல. பணத்தை எவ்வாறு கொடுத்தேன் என்றால் சொந்தகாரரிடம் கடன் வாங்கிகொடுத்தேன் நகையை அடமானம் வைத்தேன். என் உறவினர் பெயர் என்ன என்றால் நெய்வேலியில் உள்ள ஜெயகுமார். தற்போது அவர் பெங்களூரில் உள்ளார். அவரது விலாசம் அவரை கேட்டுதான் சொல்லமுடியும். அவரிடம் ரூ.10 லட்சம் வாங்கியுள்ளேன். அதை தவிற நகையை வைத்து வாங்கினேன். அவரிடம் வாங்கிய ரூ.10 லட்சத்தை தான் கொடுத்துள்ளேன். அவரைநான் சாட்சியாக விசாரிக்கிறேனா என்றால் இல்லை. நான் சொல்வது சட்டத்திற்கு புறம்பானது என்றும் பிரதிவாதி எனக்கு எந்த பணமும் தரவேண்டியது இல்லை என்றும் வழக்கு தள்ளபடியாகவேண்டும் என்றால் சரியல்ல. சாட்சிகளை எனக்கு 10 வருடம் தெரியும். முதல் சாட்சி பஷீர் என்பவர் ஏற்றுமதி வியாபாரம் செய்கிறார். ரயில்வே கேண்டினில் சமோசா வியாபாரம் செய்கிறார். 2ம் சாட்சி அரசு போக்குவரத்து கழகம், விழுப்புரத்தில் பணிபுரிகிறார். அவர்களுக்கு நான் பணம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சிகள் என் பாலிய நண்பாக்ள் என்பதால் மோசடிக்கு உடந்தையாக வாசா1ஐ தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.118/2021**

**சாட்சியின் சான்றுரை PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | பஷீர் | வட்டம் | - | |
| த/பெ | - | காஜாமொய்தீன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

08.08.2024 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.

வாதி சாட்சி 2 மீணடும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வழக்கு சம்மந்தமாக சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததா என்றால் இல்லை. எனக்கும் வாதிக்கும் 20 வருடமாக பழக்கம். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை வாதி சொன்னார் என்றால் ஆம். பிரதிவாதி வாதியிடமிருந்து பணம் வாங்கினார். பத்திர தாளில் எழுதி கொடுத்தார். முத்திரை தாளை யார் வாங்கிவந்தார் என்றால் பிரதிவாதி வாங்கி வந்தார். தட்டச்சு செய்தது நேரடியாக தெரியும். நான் எத்தனை மணிக்கு போனேன் என்றால் 11 மணிக்கு போனேன். பிரதிவாதியும் அங்கு வந்தார். பிரதிவாதி வாதி வீட்டிற்கு 10.30க்கு வந்தாரா என்றால் ஆம். நான் போகும் அங்கு இருந்தார் என்றால் சரிதான். எங்களை தவிற்த்து செங்கூட்டுவன் இருந்தார். ரகுநாதன் வீட்டிலிருந்து எல்லாரும் ஒன்றாக போனோமா என்றால் நான் தனியாக சென்றேன். வாச.ஆ1 தட்டச்சு செய்யப்பட்டதா அல்லது கையில் எழுதப்பட்டதா என்றால் அது பிரிண்ட் செய்யப்பட்டது. வாசாஆ1ல் என்ன வாசகம் எழுதப்பட்டது என்றால் தெரியாது. பணம் கொடுத்ததை பற்றி சொல்லப்பட்டுள்ளது. அது என்ன வகையான ஆவணம் என்றால் இருவருக்குள் ஏற்பட்ட பணம் பற்றிய ஆவணம் ஆகும்.

அந்த ஆவணத்தில் தகப்பனார் பெயர் ஊர் பெயர் எழுதினேனா என்றால் கையெழுத்து மட்டும் போட்டேன். என் அப்பா பெயர் எழுதினேன். ஊர் பெயர் எழுதினேனா என்றால் எழுதினேன். மற்றொருவர் பெயர் செங்கூட்டுவன் ஆவார். அவர் தகப்பனார் பெயர் ஊர் பெயர் போட்டுள்ளாரா என்றால் போட்டுள்ளார். எனக்கும் வாதிக்கும் கொடுக்கல் வாங்கல் உள்ளதா என்றால் இல்லை. செங்கூட்டுவனுக்கும் வாதிக்கும் கொடுக்கல் வாங்கள் உள்ளதா என்றால் இல்லை. விஜயலட்சுமி தமிழில் கையெழுத்து போட்டாரா ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டாரா என்று நான் பார்த்தேனா என்றால் அது அதிக நாளாகிவிட்டது ஞாபகம் இல்லை. பிரதிவாதியை தெரியும். சங்கரநாரயணன் மூலமாக தெரியும். நான் சொல்வது போல் பிரதிவாதி கடன் வாங்கவில்லை என்றும் அதற்கான ஆவணம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றும் நான் எனது நண்பருக்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் ரூ.10 லட்சம் அளித்தார். நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.118/2021**

**சாட்சியின் சான்றுரை PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | செங்கூட்டுவன் | வட்டம் | - | |
| த/பெ | - | ஆறுமுகம் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

08.08.2024 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.

வாதி சாட்சி 3 மீணடும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் வாதிக்கு என்ன உறவு என்றால் அவர் என் நண்பர். நான் விழுப்புரம், தமிழக அரசு போக்குவரத்து கழகத்தில் டெக்னீசியனாக பணிசெய்கிறேன். வேலை நேரம் காலை 6 முதல் 2 அல்லது 2 முதல் 10 ஆகும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரம் வாதி சொன்னார். அதில் உள்ள விவரம் வாதி சொன்னார். என்னுடைய தகவல் பெயரில் அது தட்டச்சு செய்யப்படவில்லை என்றால் சரிதான். எந்த ஆவணத்தில் கையெழுத்து போட்டேன் என்றால் நான் பச்சை தாளில் கையெழுத்து போட்டேன். அதில் என்ன விவரங்கள் எழுதி இருந்தது என்றால் பிரதிவாதி வாதியிடம் பணம் வாங்கிகொண்டு அதில் கையெழுத்து போட்டார். பிரதிவாதி எத்தனை கையெழுத்து போட்டார் என்று தெரியாது. பிரதிவாதி தட்டச்சு செய்து எடுத்துவந்தார். தட்டச்சு செய்யும் சம்பத் அலுவலகத்தில் செய்து எடுத்துவந்தார். நான் எங்கிருந்து வந்தேன் என்றால் என் வீட்டிலிருந்து சம்பத் அலுவலகத்திற்கு வந்தேன். பஷீர் எங்கிருந்து வந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் ஆவணத்தில் கையெழுத்து போடும் போது என்ன கிழமை என்றால் ஞாபகம் இல்லை. எத்தனை பச்சை தாளில்

கையெழுத்து போட்டேன் என்றால் 11 மணிக்கு போட்டேன். பஷீர் கையெழுத்து போட்டது தெரியாதா என்றால் தெரியும் அவரும் பச்சைதாளில் கையெழுத்து போட்டாரா என்றால் ஆம். 12.02.2020ல் நான் என் அலுவலகத்தில் வேலை பார்த்தேன் என்றால் இல்லை அன்று நான் விடுமுறையில் இருந்தேன். ஆவணத்தை வரவழைத்து பார்த்தால் நான் அலுவலகத்தில் இருந்தேனா அல்லது விடுமுறையில் இருந்தேனா என்று தெரியும் என்றால் சரிதான். பஷீர் வாதியிடமிருந்து ரூ.20 லட்சம் கடன் வாங்கியிருந்தது தெரியுமா என்றால் தெரியாது. அதேபோல் நான் எவ்வளவு கடன் வாங்கியுள்ளேன் என்றால் கடன் வாங்கவில்லை. வாதி அந்த நாளில் அவர் வீட்டிலிருந்து வந்தார். பிரதிவாதி எங்கிருந்து வந்தார் என்றார் என்றால ் தெரியாது. வழக்கு சம்மந்தமாக சாட்சி சொல்ல சம்மன் வந்ததா என்றால் இல்லை வழக்கறிஞர் சொன்னார். வாதி எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் 10 லட்சம் கொடுத்தார். 12.02.2020ல் கொடுத்தார். பச்சை தாளில் பிரதிவாதி கையெழுத்து செய்ததை வாதி பார்த்தாரா என்றால் தெரியாது. நான் பஷீர், வாதியும் நெருங்கிய நண்பர்கள் என்றும் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியுடன் யார் வந்தார் என்றால் ஒருவர் வந்தார் யார் என்று தெரியவில்லை.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.